பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 17 செவ்வாய்க்கிழமை 02.01.2024 அதிர்வு 155

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளைமறுதினம் ஆரம்பம்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள், 04▶



### தீயில் கருகிய நிலையில்

# மலையகச் சகோதரர்கள் இருவர்

# வடமராட்சியில் சடலங்களாக மீட்பு

### நீதிவான் நேரில் விசாரணை




(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

மலையகத்தின் உடப்புசல்லாவையைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை - முனைப் பகுதியில் உள்ள களஞ்சியசாலையொன்றில் தீயில் கருகிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை கடற்றொழில் உபகரண களஞ்சியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, 04▶

# ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணிலே!


### கட்சியின் பொதுச்செயலாளர் திட்டவட்டம்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நிறுத்தப்படுவார் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04▶





# கோட்டாவின் நிலைதான் ரணிலுக்கும்



## வற் வரியே காரணம் என்கிறார் இராதாகிருஷ்ணன்




"கோட்டாபய ராஜபக்ச அன்று வற் வரியைக் குறைத்து தனது பதவியை இழந்தார். ரணில் விக்கிரமசிங்க இன்று வற் வரியை அதிகரித்து தனது பதவியை இழக்கப் போகின்றார். வற் வரி அதிகரிப்பையே இந்த அரசு மக்களுக்குப் பரிசாக வழங்கியுள்ளது."

– இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சந்திரசேகரனின் 14 ஆவது சிராந்த்த தின நிகழ்வு நேற்று ஹட்டனில் உள்ள ம.ம.முவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றி இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:–

"விலை அதிகரிப்பு, பொருள்கள் தட்டுப்பாடு போன்ற செய்திகளே புத்தாண்டில் வெளிவருகின்றன. இந்நிலையில், வற் வரி அதிகரிப்பால் நடுத்தர மற்றும் கீழ் மட்டங்களில் உள்ளவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்களுக்கும் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் தேர்தல் வருடம், இந்த அரசை விரட்ட மக்கள் தீர்மானித்து விட்டது. எனவே, தோல்விக்காக இந்த அரசு காத்திருக்கின்றது என்றே கூற வேண்டும்." – என்றார்.

# மொட்டுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு ராஜபக்ஷ அல்லாத ஒருவர் வர வேண்டும்

## சம்பிக்க எம்.பி. கோரிக்கை



"மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ராஜபக்ஷ அல்லாத ஒருவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைப் பதவிக்கு வர வேண்டும்."

– இவ்வாறு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையுடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பொதுவேட்பாளராகக் களமிறங்கவுள்ளதாக சுதந்திர மக்கள் சபை உறுப்பினர்களிடம் கூறியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவலில் எவ்வித உண்மையும் இல்லை.

எமது அரசியல் கொள்கை பற்றி தெரிந்த மக்களுக்கு இது பொய் என்பது தெரியும். எனினும், இதனை வைத்து எதிர்காலத்திலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படலாம் என்பதால்தான் நிராகரிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ வின் பொருளாதாரக் கொள்கைகளை கடுமையாக 2014 இலேயே விமர்சித்தவன் நான். நாடு வங்குரோத்து அடையும் என அன்றே கூறியிருந்தேன்.

நாட்டை வங்குரோத்து அடைந்ததரப்புடன் நாம் இணையமாட்டோம். எனவே, மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டும். ராஜபக்ஷ அல்லாத ஒருவரிடம் மொட்டுக் கட்சியின் தலைமைப் பதவி வழங்கப்பட வேண்டும்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்கும் இடையில் அரசியல் உறவு கிடையாது. அவருடனும் அரசியல் கூட்டணி அமைக்கமாட்டோம்." – என்றார்.



# தெஹிவளையில் கடற்கரையில் சட்டவிரோத ஹோட்டல் அகற்றல்

## இடையூறு விளைவித்த மூவர் பொலிஸாரால் கைது

தெஹிவளையில் அமைந்துள்ள பிரபல ஹோட்டல் கடலோரப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து அதிகாரிகள் அதனை இடித்து அகற்றியுள்ளனர்.

இந்தக் கடற்கரையோர ஹோட்டல் தற்போது வெளிநாட்டில் இருக்கும் பிரபல போதைப் பொருள் வியாபாரிக்குச் சொந்தமானது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. பொலிஸாரின் உதவியுடன் கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அதிகாரிகளால் நேற்று ஹோட்டல் அகற்றப்பட்டது.

விடுதியில் உள்ள அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள அனைத்து கட்டடங்களையும் அகற்றி இடித்து அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

கடலோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த ஹோட்டலின் பணிப்பாளர் மற்றும் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.




# சுங்கத் திணைக்கள ஆண்டு வருமானம் 900 பில்லியன் ரூபாவைத் தாண்டியது!

இலங்கை சுங்கத் திணைக்களம், 2023 ஆம் ஆண்டுக்கான வருமானமாக 900 பில்லியன் ரூபாவைக் கடந்து சாதனை படைத்துள்ளது.

கடந்த வருடம் திணைக்களத்தின் மொத்த வருமானமாக 970 பில்லியன் ரூபா (97,000 கோடி ரூபா) பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இலங்கை சுங்கத் திணைக்களத்தின் வரலாற்றில் பெறப்பட்ட அதிகூடிய வருமானமாகும்.

இந்த தொகையானது, 2022ஆம் ஆண்டின் வருமானத்தை விட 138 வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஆரம்பமாகிய போது, சுங்கத் திணைக்களத்தின் வருடாந்த வருமான இலக்காக 1,217 பில்லியன் ரூபாவை நிதி அமைச்சு தீர்மானித்திருந்தது.

எனினும், கடந்த வருடத்தில் நிலவி வந்த பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக இந்த தொகையானது 893 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

தொடர்ந்து, குறிக்கப்பட்ட இலக்கை அடைந்த இலங்கை சுங்கத் திணைக்களத்தின் இதற்கு முந்தைய ஆகக் கூடிய வருமானமாக 2018 ஆம் ஆண்டு பெறப்பட்ட 923 பில்லியன் ரூபா இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வரலாறு காணாத வகையில் மரக்கறிகளின் விலை உயர்வு

(நுவரெலியா நிருபர்)

நாட்டில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் தற்போது காணப்படுகின்ற தொடர் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக மரக்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவரும் அகில இலங்கை ஒன்றிணைந்த விசேட பொருளாதார நிலையத்தின் ஆலோசகருமான அருண சாந்த ஹெட்டியாராச்சி இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

“வரலாறு காணாத வகையில் தற்போதைய மரக்கறி களின் விலைகள் உயர்ந்துள்ளன. கோவா ஒரு கிலோ 470 முதல் 490 ரூபா வரையிலும், கரட் ஒரு கிலோ 660 முதல் 680 ரூபா வரையிலும், பீட்ரூட் ஒரு கிலோ 350 முதல் 370 ரூபா வரையிலும், தக்காளி ஒரு கிலோ 400 முதல் 450 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன் போஞ்சி ஒரு கிலோ 600 முதல் 650 ரூபா வரையிலும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 1,500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறு இலங்கை வரலாற்றில் முதன் முறையாக மரக்கறிகளின் விலை அதிகளவுக்கு அதிகரித்த போதிலும் விவசாயிகளுக்கு எவ்வித இலாபமும் கிடைக்கவில்லை.

அதேநேரம் மரக்கறிகளின் விலை அதிகரிப்புக் காரணமாக நுகர்வோர் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்து வருகின்றனர்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை...**

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அதனைத் தரவிறக்கம் செய்ய முடியும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 2 இலட்சத்து 81 ஆயிரத்து 445 பேர் பாடசாலை மாணவர்கள் என்பதுடன், 65 ஆயிரத்து 531 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 258 பரீட்சை மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அதேவேளை, இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக முதல் முறையாக கொரிய மொழிப் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**ஐ.தே.கவின்...**

“இந்நாட்டில் தற்போது உள்ள தலைவர்களில் சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ள சந்தேகமில்லாமல் தீர்மானங்களை எடுக்கும் அனுபவமுள்ள ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார். ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களை அமுல்படுத்துவதன் மூலம் 25 வருடங்களின் பின்னர் நாட்டின் தேசிய வருமானம் அதிகரிக்கும். அதன்மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும்.

மக்கள் வரிசையில் நின்றுக்கொண்டிருந்த தருணத்தில் நாட்டைக் காப்பாற்றுமாறு சிலரிடம் கோரிய போது பயந்து ஓடிப்போய் ஒளிந்துகொண்டவர்கள் இன்று மீண்டும் மக்களைத் தவறாக வழிநடத்திச் செயற்படுகின்றனர். ஆகவே, மக்கள் இவ்வாறு போலி பிரசாரங்களுக்கு அகப்பட வேண்டாம். நாடு பொருளாதார ரீதியாக ஸ்திரத்தன்மையை எட்டி வருகின்றது. இவ்வாண்டு இறுதிக்குள் மிகவும் ஸ்திரமான பொருளாதாரமாக எமது பொருளாதார மாறும். ஜனாதிபதி அதற்கான அனைத்துத் தீர்மானங்களையும் எடுத்துள்ளார். ஐ.தே.கவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவரால் மாத்திரமே இந்த நாட்டை உறுதியாக மீட்டெடுக்க முடியும்.” – என்றார்.

**மலையகச் சகோதரர்கள்...**

புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இருவரும் களஞ்சியசாலை சென்று கதவைப் பூட்டி விட்டு நித்திரைக்குச் சென்றபோது அதிகாலை 12.30 மணியளவில் களஞ்சியசாலை தீப்பற்றி எரிந்துள்ளது.

இதையடுத்து அருகில் இருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்டபோதும், களஞ்சியசாலையில் உறக்கத்தில் இருந்த இருவரும் உடல் கருகிப் பலியானதுடன் அங்கிருந்த பொருள்களும் தீயில் எரிந்ததால் அருகில் இருந்த வாகனத் தரிப்பிடத்திலும் தீப்பரவி சேதமடைந்துள்ளது.

மலையகத்தின் உடப்புசல்லாவை, மேல் பிரிவு, பிள்ளையார் லோமண்ட் தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களான வேலாயுதம் புவனேஸ்வரம் என்ற 45 வயதானவரும், வேலாயுதம் ரவி என்ற 37 வயதானவருமே உயிரிழந்துள்ளனர்.

களஞ்சியசாலையில் இருந்த சிலிண்டர் தீ விபத்துக்குக் காரணமாக இருக்குமா எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் இடத்தில் பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிரிஷாந்தன், தடயவியல் பொலிஸார், பருத்தித்துறைப் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் பிரிவினைகளை ஏற்படுத்தாது அமைதியான தேசத்தை அமைப்போம்!

## நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்பதால் தேர்தலை இலக்காகக்கொண்டு நாட்டுக்குள் இன, மத, மொழிப் பிரிவினையை உருவாக்க சுயநல அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது . அமைதியான தேசத்தை அமைக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி ஜனநாயக சமூகத்தில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி, அமைதியான தேசத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதுவருடத்துக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று (01) நீதி அமைச்சு வளாகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்துள்ளவை வருமாறு,

2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்பதை நாம் அறிவோம். அடுத்து எந்த மாதிரியான தேர்தல் வந்தாலும் இன, மத, மொழிப் பிரிவினையை உருவாக்க சுயநல, சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது.

ஜனநாயக சமூகத்தில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி, அமைதியான தேசத்தை அமைக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரச ஊழியர்கள் என்றவகையில் நாங்கள் ஒவ்வொரு வருடமும் உறுதிப்பிரமாணம் வழங்கினாலும் அரச ஊழியர்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லெண்ணம் இல்லை.

எனினும் நீதி அமைச்சின் அதிகாரிகளாக நாங்கள் நாட்டில் இருக்கும் முன்மாதிரியான அமைச்சு என்பதை மக்கள் மத்தியில் உறுதிப்படுத்தி இருக்கிறோம்.



உலகில் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த நாடுகளை பார்க்கும் போது இந்தளவு குறுகிய காலத்துக்குள் ஸ்திரநிலைக்கு வந்த வேறு நாடு இல்லை.

எமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் கீழ் நிலைக்கு வீழ்ச்சியடைந்தது. நாங்கள் தற்போது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிச் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

2023ஆம் ஆண்டும் ஜீ.எஸ்.பி. பிளஸ் நிவாரணத்தை பெற்றுக் கொள்ள மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தவணையை பெற்றுக் கொள்ள தேவையான முக்கியமான அளவுகோல்களைப் பூரணப்படுத்தும் பொறுப்பை மேற்கொண்டது நீதி அமைச்சாகும்.

வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்காகக் கடந்த ஒன்றரை வருட காலத்துக்குள் நாங்கள் நாடவடிக்கை எடுத்தோம்.

2024ஆம் ஆண்டுக்குள் 60 புதிய சட்ட மூலங்களை அனுமதித்துக் கொள்ள தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

சுதந்திரத்துக்கு பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியலமைப்பு புரட்சி 21 ஆம் அரசியலமைப்பு திருத்தமாகும். ஊழல் எதிர்ப்பு உள்ளிட்ட பல புதிய சட்டங்களை அனுமதித்துக் கொண்டு மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம்.

அதனால் மதம், மொழி, இன வர்க்கமாகப் பிளவுபட்டுச் செயற்பட்டால் நாடு என்ற வகையில் நாங்கள் எதிர்பார்க்கும் இலக்குக்கு செல்ல முடியாது.

அதனால் 2024 ஆம் ஆண்டின் முதல் வாரத்துக்குள் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்க அலுவலக சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் அனுமதித்துக் கொள்வோம்.-என்றார்.

# சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் உப பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்வு!

வெலிகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட், உப பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றிய உபுல் சமிந்த குமாரவுக்கே இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி வெலிகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இந்த சார்ஜன்ட் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் டிசெம்பர் 31 முதல் அவருக்குப் பதவி உயர்வு வழங்கியுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அடக்குமுறை எச்சரிக்கை

அரக்கனை தோற்றுவித்து, தட்டி எழுப்பி, களத்தில் மக்களை மேய விட்டு விட்டு, இப்போது அந்த அரக்கன் தொடர்பில் மக்களைத் தூண்டி விடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாய்கின்றார் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனா திபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கா.

நிறைவேற்றதிகாரத்தின் அடக்குமுறைப் போக்கின் அப்பட்டமான வெளிப்பாடு தான் இந்த எச்சரிக்கை.

''பெறுமதி சேர் (வற்) வரி பற்றித் தொடர்பில்லாத அரக்கனை உருவாக்கி, மக்களைத் தூண்டி விடுபவர்களுக்கு எதிராகக் கடும் நட வடிக்கைகள் குறித்து ஆலோசித்து வருகிறோம்'' - என்று அவர் தெரிவித்திருக்கும் எச்சரிக்கை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

மக்களின் அடிப்படை உரிமைகளில் பிரதான மான ஒன்றும், அரசமைப்பின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதுமான கருத்து வெளியிடும் சுதந்திரத்தைப் பறித்து, மக்களை அடக்குவதற்கு எதேச்சாதிகாரம் தயாராகின்றது என்பதற்கான கட்டியமே இந்த அறிவிப்பு.

இப்போது பல பொருள்கள் மேற்படி பெறுமதி சேர் வரிவிதிப்புக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மேலும் பல பொருள்களுக்கு இருந்த வற்வரி இப்போது அதிகரிக்கப்பட்டிருக் கிறது.

கடந்த 20 ஆண்டுகாலத்தில் முன்னெப் போதும் இல்லாத வகையில் வற் வரி உயர்த்தப் பட்டிருக்கின்றது.

நேற்று முதல் திரும்பிய பக்கம் எல்லாம் விலை உயர்வுப் பிரச்சினை. அத்தியாவசியப் பொருள்களில் இருந்து ஆடம்பரப் பொருள்கள் வரை - அத்தியாவசிய சேவைகளிலிருந்து பொழுதுபோக்கு அம்சங்கள் வரை - எல்லா முமே ஒரே நாளில் மாறி விட்டன.

எரிபொருள், உணவு வகைகள், தேநீர், பல காரங்கள், பஸ் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள், நீர்க் கட்டணம், தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்புக் கட்டணங்கள், மருந்துப் பொருள்கள் எல்லாவற்றின் விலையும் ஒரே நாளில் - வருடம் பிறந்த உடனேயே - எகிறி விட்டமையைப் பார்த்து மக்கள் பதறிப் போய் நிற்கிறார்கள்.

இந்த விலைவாசி உயர்வு வெறுமனே வாழ்க்கை வசதி பற்றிய பிரச்சினை மட்டுமல்ல, அதையும் தாண்டி இது வாழ்நிலை தவிப்பு. ஏற்கனவே பொருளாதாரப் பாதிப்பினாலும் நெருக்கடிகளினாலும் வாடி வதங்கி சுருண்டு கிடக்கும் ஒரு தேச வயிறுகளின் கொதிப்பு. நாட்டின் பல மில்லியன் கணக்கான வாய்களி னதும் வயிறுகளினதும் வாழ்நிலைத் தவிப்பாக - அன்றாட அவலமாக - பசியுணர்வின் உறுத்த லாக - இந்த நெருக்கடி பூதாகர உருக்கொண்டு நிற்கின்றது.

நாட்டின் அன்றாடம்காய்ச்சிகளின் அவலம் சொல்லும் தரமன்று. இந்தத் திடீர் விலைவாசி உயர்வினால் பேரவலப்பட்டு கிடக்கும் சமூகம் - தேசம் - அதன் சாதக, பாதகங்களைப் பற்றிப் பேசும். தனக்குள் கருத்துப் பரிமாறிக்கொள்ளும். அது தவிர்க்க முடியாதது. அப்படி பேசுவது ஒவ்வொருவரின் ஜனநாயக உரிமையும் கூட. அதை வாய்ப் பூட்டுப் போட்டு அடக்குவது போல மிரட்டல் பேச்சு பேசுகின்றார் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி.

பொருளாதாரத்தில் அழிந்து போயிருக்கும் ஒரு நாடு மீட்சி பெறுவதற்குப் பாடுகளைச் சுமந்துதானாக வேண்டும். கஷ்டங்களைத் தாங்கித்தானாக வேண்டும். கடுமையான வரி விதிப்புகளை எதிர்கொண்டுதானாக வேண்டும். அது நியாயமானதுதான்.

ஆனால், எதற்கு வரி விதிப்பது, கஷ்டங்களை அதிகம் சுமக்க வேண்டியவர்கள் யார் என்பவை எல்லாம் ஆட்சியாளர்கள் எதேச்சாதிகாரமாக முடிவு செய்யும் விடயங்களாக இருக்க முடி யாது. ஜனநாயக ஆட்சி நிலவுவதாகக் கூறப்படும் நாட்டில், இவ்விடயங்கள் பொதுவெளியில் அலசி ஆராயப்பட வேண்டும். அதற்கான உரித்து அனுமதிக்கப்பட வேண்டும். மாறாக அடக்கப்பட முடியாது. அடக்கப்படக் கூடாது. நாட்டுக்கே பெருந்தொகை கடன் கொடுத்து, அந்த வட்டியிலேயே பெரும் பணக்காரர்களாக உல்லாச வாழ்க்கை வாழ்பவர்களை, அதற்குத் தாராள அனுமதித்துக் கொண்டு, அவர்களுக்கான வட்டிக் கொடுப்பனவு நிலுவைகளில் கை வைக்காமல், அதற்குப் பதிலாக கடைநிலை ஊழியர்களின் சேம லாப நிதியச் சேமிப்பில் சூறையாடுவது போன்ற தீர்மானங்களை விமர்சிக்கவும், கண்டிக்கவும், எதிர்ப்புக் காட்டவும் மக்களுக்கு உரிமை உண்டு.

கொழுத்த முதலாளிகளின் வரி நிலுவைகளை அறவிட திராணியற்ற அல்லது விருப்பமற்ற நிலையிலிருந்து கொண்டு, அப்பாவி மக்களின் அத்தியாவசியப் பொருள்கள் மீது அதீத வரி விதித்து, சுரண்டும் எதேச்சாதிகாரத்தை விமர்சிக்கக் கூடாது என்று அதிகாரம் செலுத்துவது மிக மிக மோசமான செயல்.

# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களை தற்போதைய வரி மேலும் துன்புறுத்துகிறது!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. விசனம் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

இந்த நாட்டில் வரி விலக்கு ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது வரி விதிப்பு என்பது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கியுள்ளது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பில் அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வரி விதிப்பு என்பது நாட்டின் வளர்ச்சிக்கு என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை.

ஆனால் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை நிமித்தம் குறித்த வரி அமுல்படுத்த பட்டிருக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஈவினையின்றி செயல்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மக்களின் பொருளாதாரத்தில் இருந்து இந்த வரி விலக்கு அமுல்படுத்தப்பட்டிருக்கின்றமை தேவையற்ற ஒரு விடயமாக காணப்படுகிறது. இந்த வருடத்திலாவது அரசு கவனம் செலுத்த வேண்டும். இந்த வரி விதிப்பை மிக குறைவான மதிப்பீடு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வையும் அரசு நடைமுறைக்கு வரும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்.- என்றார்.




# பொழுதுபோக்கு மையமாக யாழ். சங்கிலியன் பூங்கா!

யாழ்ப்பாணம் முத்திரை சந்தியில் உள்ள சங்கிலியன் பூங்கா யாழ். மாநகர சபையால் பொழுதுபோக்கு மையமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா பொது மக்களின் பயன்பாட்டுக்கு உரிய இடமாக நேற்று (01) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்காவின் நீண்ட கால அபிவிருத்தி பணிகளில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகத் தற்காலிகமாகப் பொழுது போக்கு மையமாகப் பயன்படுத்தக் கூடியவாறு மாற்றப்பட்டுள்ளது.

படிப்படியாக இந்தப் பூங்காவை மேம்படுத்த உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பொது மக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இந்தப் பொழுது போக்கு மையத்தைத் தற்போது இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் காலப்போக்கில் கட்டணங்கள் தொடர்பாக தீர்மானிக்கப்படும் எனவும் யாழ். மாநகரசபை தெரிவித்துள்ளது.




# 2023இல் 4 ஆயிரத்து 269 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர்

## யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல்

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 4 ஆயிரத்து 269 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

கடந்த மாதம் டிசெம்பரில் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் 2 அயிரத்து 505 பேர் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றுள்ளனர். கடந்த டிசெம்பர் மாதம் 3 மரணங்கள் பதிவாகியுள்ளன.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் ஆயிரம் பேர் வரையானோருக்கு அதிகமாக டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் பெய்த தொடர்ச்சியான மழை காரணமாக டெங்கு பரவல் அதிகரித்தது. யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இடங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் பொது மக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் பொது மக்கள் தங்கள் சார்ந்த இடங்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். – என்றார்.

# ஐக்கிய அமீரகச் சிறைகளிலிருந்த 44 இலங்கையர்களுக்கு மன்னிப்பு

ஐக்கிய அரபு இராச்சியத்தின் (அமீரகம்) பல்வேறு சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வந்த 44 இலங்கையர்களுக்கு அந்த நாட்டு அரசால் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த வார இறுதியில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய அரபு இராச்சிய அரசின் செலவில் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் 52 ஆவது தேசிய தினமான டிசெம்பர் 2 ஆம் திகதியன்று, அரச ஆணை மூலம் இந்த இலங்கைக் கைதிகள் மன்னிக்கப்பட்டனர் என்று அபுதாபியில் உள்ள



இலங்கைத் தூதரகத்துக்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சகம் அதிகார பூர்வமாகத் தெரிவித்துள்ளது.





# வீரத்துறவி விவேகானந்தருக்கு மட்டக்களப்பு கல்லடியில் சிலை!

## அடிக்கல் நேற்று நடப்பட்டது

(கல்லடி செய்தியாளர்)

இராம கிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தருக்கு சிலை அமைக்க மட்டக்களப்பு கல்லடியில் நேற்று அடிக்கல் நடப்பட்டது.

மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராம கிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மாதவானந்தா மஹறாஜ் ஏற்பாட்டில் ஆன்மீகத் துறவி சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.



மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராம கிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீல மாதவானந்தா மஹறாஜின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், இராமகிருஷ்ணமிஷன் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி கரச்சிதானந்தாஜீ, மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவன், மட்டக்களப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் மு.கணேசராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன்போது சுவாமிகளின் திருவுருவப் படத்துக்குப் பூஜை நிகழ்த்தப்பட்டு, அதிதிகளால் சிலை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

# கரையோரங்களில் பிளாஸ்ரிக் கழிவு; அகற்றுமாறு மீனவர்கள் கோரிக்கை!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டக் கடற்கரையோரங்களில் அடைமழை காரணமாகப் பிளாஸ்ரிக் மற்றும் இறந்த தாவரங்களின் கழிவுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோடுவதற்காகத் தற்காலிகமான கால்வாய்கள் கடலை நோக்கி கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வெட்டப்பட்ட நிலையில் இவ்வாறான கழிவுகள் அதிகளவாக கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்து காணப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, மாளிகைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவுகள் ஒதுங்கியுள்ளன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடி தொழிலுக்கு பெரும் சிரமங்களை கொடுப்பதுடன் வலைகளிலும் சிக்கி வருகின்றன.





எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.




# அம்பாறை நிர்மாணப் பணி தொடர்பில் கலந்துரையாடல்

**(சியாத்.எம். இஸ்மாயில் )**

அம்பாறை மாவட்டத்தில் செயற்படுத் தப்பட்டு வரும் நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப்பணிகள் தொடர்பான மாவட்ட மட்ட கலந்துரையாடல் அக்கரைப்பற்று சுவாட் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.



அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பும் நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாணப்பணிக் குழுவும் இணைந்து சுவாட் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் கே.பிரேமலதனின் ஒருங்கிணைப்பில் ஸ்தாபகர் எஸ். செந்தூராசா தலைமையில் நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் சகல நிர் மாணப் பணிகளும் வலுவான பொரு ளாதாரத்தைக் கட்டி எழுப்பி, மக்களுக்கு சிறந்த நல்வாழ்வை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன. வினைத்திறனான சமூக செயற்பாட்டுக் குழுவொன்றை மாவட்டத்தில் உரு வாக்கி, அதனூடாக மக்களின் தேவைகள், விருப்புக்களை கருத்தில் கொண்டு இந்த நிர்மாணப் பணிகளின் பொதுப் பணச் செலவுகள் சரியாக முன் னெடுக்கப்படுவதை உறுதி செய்வது தொடர்பில் குழுவின் இணைப்பாளர் சமந்த விக்கிரம விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்விமான்கள், ஓய்வு பெற்ற அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பல்துறை சார்ந்த அரச நிறுவன அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், ஊடகவியலா ளர்கள், சமூக மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், இளையோர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது இந்தச் செயற்றிட்டத் துக்கான மாவட்ட மட்டக் குழு தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுசியா சேனாதிராஜா தெரிவு செய்யப்பட்டார்.

# கல்முனை மாநகர சபையில் டிஜிட்டல் முகப்பு அலுவலகம்

**(ஏ.எஸ்.மௌலானா, எம்.எம்.றம்ஸீன்)**

கல்முனை மாநகர சபையில் பொது மக்களுக்கான சேவைகளை ஒரே கூரையின் கீழ் வழங்கும் பொருட்டு டிஜிட்டல் வசதிகளுடன் அமைக்கப்பட்ட முகப்பு அலுவலகம் நேற்று திங்கட் கிழமை (01) திறந்து வைக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, கணக்காளர் கே.எம். றியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ. வட்டப்பொல, வேலைகள் அத் தியட்சகர் வி. உதயகுமரன், உள்ளூ ராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம். நௌசாத், நிதி உதவியாளர் திருமதி எஸ். யோகராஜா, நிதிப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.பாஸித், ஏனைய பிரிவுகளின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத் தர்களான என். பரமேஸ்வரவர்மன், யூ.எம். இஸ்ஹாக், எம்.ஏ. அஹத் உள் ளிட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

இதன்போது பொது மக்களுக்கான சேவை வழங்கல் பணிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் சேவைகளை பெற்றுக் கொள்ள வருகை தருகின்ற பொது மக்கள் இந்த முகப்பு அலுவலகத்தில் உள்ள கரும பீடங்களில் உரிய ஆவணங்களுடன் சோலை வரி மற்றும் சேவைக் கட்டணங்களை செலுத்திவிட்டு, இங்கு இருந்தவாறே தமக்கான சேவைகளை இலகுவாக நிறைவு செய்து கொண்டு செல்ல முடியும் என்று மாநகர ஆணையாளர் இதன் போது குறிப்பிட்டார்.







# நீரிழிவு நோயாளர்களுக்கு இலவச ஆலோசனை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் டாக்டர் ம.அரவிந்தனின் வைத்திய ஆலோசனை நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

டாக்டர் ம.அரவிந்தன்,யாழ். போதன வைத்தியசாலை உட்சுரப்பியல் நிபுணர், தாதிய குழுவினரும் இந்த நிகழ்வுக்கு வருகை தந்தனர்.

இரட்ணம் அறக்கட்டளையின் அனுசரனையுடன் 2005 ஆம் ஆண்டில் இருந்து நடைபெற்று வரும் நீரிழிவு நிலையத்துக்கு ஒழுங்காக வருகை தந்த 28 நோயாளர்களுக்கு இலவச வைத்திய ஆலோசனை இதன்போது வழங்கினர். இதற்காக மூன்று தினங்களாக பரிசோதனைகள் இரட்ணம் அறக் கட்டளையின் நிதி உதவியுடன் நடைபெற்றது.



# மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகரின் 14 ஆவது ஆண்டு!

(தலவாக்கலை நிருபர்)

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் 14 ஆவது நினைவு தினம் நேற்று (01) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தலைமையில் தலவாக்கலை நகரில் அமைந்துள்ள ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலவாக்கலை பிரதேச அமைப்பாளர்கள் ராஜா, தினேஸ், பிரசாந்த் சர்மா, ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் இணைப்பாளர் அஜித் மற்றும் பல கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டனர்.







# பள்ளத்தில் பாய்ந்து ஓட்டோ விபத்து; இரு சிறுவர் உட்பட நல்வர் படுகாயம்!

பலாங்கொட - வலேபொட பகுதியில் ஓட்டோ ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

அந்த ஓட்டோ வலேபொட, மனதுங் கந்த பகுதியில் நேற்று (01) விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், ஓட்டோ சுமார் ஐம்பது அடி செங்குத்தான சரிவில் கவிழ்ந்து தேயிலை செடிக்குள் சிக்குண்டுள்ளது என்று கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக பலாங்கொடை ஆரம்ப வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் இரண்டு குழந்தைகளும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பில் பலாங்கொடை பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.



# சாய்ந்தமருது ஆறுகளை அண்டியுள்ளோர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள்

## பிரதேச செயலாளர் அறிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை, இங்கினியாகல டீ.எஸ். சேனநாயக சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சாய்ந்தமருது பிரதேச ஆறுகளை அண்மித்த பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள் வெள்ள நிலமையை கருத்தில் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும்.சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இவ்வாறான அனர்த்த நிலமையின் போது சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயம், சாய்ந்தமருது ஜீ.எம். எம்.எஸ்.வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது அல் ஜலால் வித்தியாலயம் என்பவற்றை பயன்படுத்துமாறும் அவசர தேவைகளுக்கு கிராம சேவகரது உதவியை நாடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொஸ்லந்தவில் தோட்டத்திலிருந்து வயோதிப தம்பதி சடலங்களாக மீட்பு!




கொஸ்லந்த, வேலன்விட வீடொன்றின் தோட்டத்தில் இருந்து நேற்று பிற்பகல் வயோதிப தம்பதியினரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று கொஸ்லந்த பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் அருகில் உள்ள தோட்டத்தில் வயோதிபப் பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

அத்துடன், வீட்டுக்கு மின்சாரம் வழங்கும் மின்சார வயரின் உடைந்த இரண்டு பாகங்களைப் பிடித்துக் கொண்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். சடலம் மிகவும் அழுகிய நிலையில் துர்நாற்றம் வீசிக் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றைய முதியவரின் சடலம் வீட்டின் நுழைவாயிலுக்கு அருகில் கிடந்துள்ளது.

கொஸ்லந்த வேலன்விட்ட அகரசியாவில் வசித்து வந்த ஆர்.டி.விமலாவதி என்ற 63 வயதுடையவர் மற்றும் உதநிலமேகெதர குணதாச என்ற 70 வயதுடையர் ஆகிய இருவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் வயோதிப தம்பதியினர் மாத்திரமே இருந்துள்ளர்.

வெல்லவாய பிரதேசத்தில் வசிக்கும் மகள் ஒருவர் புத்தாண்டை முன்னிட்டு நேற்றுப் பெற்றோரைப் பார்க்க வந்த போது தாய், தந்தையரின் சடலங்களை கண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விசேட தேவையுடைய பிள்ளைகளை வலயத்தில் பதிவு செய்ய அறிவுறுத்து

விசேட தேவையுடைய பிள்ளைகளை வலயக் கல்வி அலுவலகங்களில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தக் குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்கும் நோக்கில் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழந்தைகளின் சிறப்புத் தேவைகளைக் கருத்தில் கொள்ள மண்டல அலுவலக அளவில் நூறு மதிப்பீட்டுக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

குழந்தையின் சிறப்புத் தேவைகளைப் பொறுத்து, அவர்கள் வீட்டில் கற்பிக்கப்படுகிறார்கள் அல்லது பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

அந்தப் பிள்ளைகளை உரிய வயதில் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்துக்கு அனுப்புவது தொடர்பான பாடத் திட்டத்தையும் அமைச்சு தயாரித்து மதிப்பீட்டுக் குழுக்களுக்கு வழங்கியுள்ளது.

பதிவு செய்யப்படும் பிள்ளைகள் பாடத்திட்டத்தின்படி கற்பிக்கப்படுவார்கள் என்றும் அங்கு காட்டப்படும் போக்குகளின் அடிப்படையில் முதலாம் தரத்துக்கு உள்வாங்கப்படுவார்கள் என்றும் அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடுமையான ஊனமுற்ற குழந்தைகளுக்கு வீட்டில் கற்பிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், அத்தகைய மூன்று குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் பணியமர்த்தப்படுவார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்திருந்தார்.

# ஜீவ ஊற்றின் கரம் அமைப்பினரால் வவுணதீவு பயனாளிகளுக்கு வீடுகள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)



ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் உன்னதமிக்க சேவையின் பலனாக புதிய இல்லம் மற்றும் மலசலகூடம் என்பன நிர்மாணிக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் 97 ஆவது இல்லம் கையளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரைச் சேர்ந்தவரும் தற்போது சுவிஸ் தேசத்தில் வசிக்கின்றவருமான நவநாதன் நவநீதனின் சொந்த நிதியில் நிர்மாணிக்கப்பட்ட 2 ஆவது இல்லம் இவ்வாறு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுனதீவு பிரதேசத்துக்கு உட்பட்ட நரிபுல்தோட்டம் எனும் கிராமத்தில் பல்வேறு இன்னல்களுடன் வாழ்ந்து வரும் குடும்பத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.



# வெள்ள நீரில் சிக்கித் தவிக்கும் உப்பாறு கிராமத்து மக்கள்!

## தரை வழி போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டுள்ளது

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உப்பாறு கிராம சேவகர் பிரிவில் உள்ள மயிலப்பன் சேனை, சோலை வெட்டு வான், காரவெட்டுவான், கண்டல் காடு பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள நீரால் தரைவழி போக்குவரத்துகள் ஐந்து நாள்களாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

மக்கள் வெளியேற முடியாமல் வெள்ள நீரில் சிக்கி தவிக்கின்றனர். தரை வழி போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டுள்ளன.

வெள்ளத்தால் தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு தனித்து விடப்பட்ட உப்பாறு கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிண்ணியா பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் உலர் உணவுப் பொருள்களே இவ்வாறு பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

நான்கு கிராமங்களை சேர்ந்த சுமார் 105 குடும்பங்களுக்கு 2400 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கடந்த நான்கு நாள்களாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று நாள்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டார். அவர்களுக்கான உதவிகளை அரசு செய்ய வேண்டும். மக்களின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. வருடா வருடம் இந்த வெள்ளம் ஏற்பட்டு வருகிறது. கந்தளாய் குளத்தின் பத்து வான் கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் இவ்வாறான நிலமைகள் ஏற்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் தரவுகள் பெறப்பட்டு அவர்களுக்கான உதவிகளை வழங்க கடமைப்பட்டுள்ளோம். கிண்ணியா பிரதேச செயலாளரும் இங்கு வருகை தந்தமையால் சில ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன என்று இதன்போது தெரிவித்தார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கய கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை அரசின் ஊடான நிதிகளை பெற்று மூன்று நாள்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலதிகமாகவும் தரவுகளை பெற்று இன்னும் உலர் உணவுப் பொதிகளை வழங்க இருக்கிறோம். மக்கள் இந்தக் கிராமத்தை விட்டு வெளியேற முடியாது. அவர்களுக்கான சகல உதவிகளை செய்ய அவதானத்துடன் காத்திருக்கிறோம்.– என்றார்.





# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கண் பரிசோதனை இயந்திரம்!

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு, 2.5 மில்லியன் ரூபா பெறுமதியிலான கண் பரிசோதனை இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைப் பணிப்பாளரால், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, கனடா, மொன்றியலில் இயங்கும் புறுட்ஸ் கபி நிறுவன உரிமையாளரான சின்னத்துரை சண்முகலிங்கம் 2.5 மில்லியன் ரூபா நிதிப்பங்களிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட, ஜப்பான் தொழிநுட்பத்துடன் கூடிய இந்தப் பரிசோதனை இயந்திரத்தை வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வில், வைத்தியசாலை நிர்வாகத்தினரால் தெரிவுசெய்யப்பட்ட 100 பயனாளிகளுள் முதற்கட்டமாக 39 பேருக்கான இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சுகந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி துஸ்யந்தன், கண் சிகிச்சை நிபுணர், வைத்திய கலாநிதி ஞானரூபன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளார், புறுட்ஸ் கபி நிறுவன உரிமையாளர் சின்னத்துரை சண்முகலிங்கம் மற்றும் அவரது குடும்பத்தினர், வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையினர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.





# சாகாமம் குளம் வான்பாய்கிறது; மக்கள் கண்டுகளிக்க படையெடுப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்துக்கு உட்பட்ட சாகாமம் நீர்ப்பாசன குளத்தின் மேலால் வெள்ளம் வான் பாய்கின்றது.

மக்கள் தினமும் அதனை கண்டு களிக்க படையெடுத்து வருகின்றனர்.

கடந்த நான்கு தினங்களாக அங்கு வெள்ளம் வான் பாய்வதை காணக் கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை கஞ்சிகுடிச்சாறு குளமும் வான் பாய்கிறது.





# மட்டு. உன்னிச்சை, அம்பாறை ரம்புக்கள் ஓயா வான் கதவுகள் திறப்பு; மக்களுக்கு எச்சரிக்கை!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு உன்னிச்சை, நவகிரி மற்றும் அம்பாறை ரம்புக்கன் ஓயாவின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் மட்டு செங்கலடி, சித்தாண்டி வெல்லாவெளி பிரதேசங்களைச் சேர்ந்த மக்களை அவதானமாக இருக்குமாறு இன்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

சீரற்ற கால நிலையால் தொடர் மழை காரணமாக இன்று காலை 8 மணிவரையிலாக 24 மணித்தியாலயத்தில் மட்டக்களப்பில் 169.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரிய குளங்களான உன்னிச்சை, நவகிரி , வடமுனை, வெலியாகந்தை குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. உன்னிச்சை குளத்தின் 3 வான் கதவுகளும், நவகிரிகுளம், றூகம்குளம், வடமுனைகுளங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

அதேவேளை, அம்பாறை ரம்புக்கன் ஓயாவின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் மட்டக்களப்பு செங்கலடி, சித்தாண்டி பகுதியில் வெள்ளம் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு நவகிரிகுளம் வான் கதவு திறகப்பட்டுள்ளாதால் வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்களையும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை மழை வெள்ளத்தால் மாவட்டத்தில் உள்ள பல தாழ்நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. வீடுகளில் வெள்ள நீர் புகுந்ததால் வாகரை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லரிப்பு பிரதேசத்தில் 56 குடும்பங்கள் இடைத்தாங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

பல பிரதேசங்களில் மழை வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வயல் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.



# பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் செயலராக சத்தியசீலன் பொறுப்பேற்பு

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மொழிகள் பிரிவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் வடமராட்சி வடக்கு – பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் செயலாளராகக் கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

புத்தாண்டு தினமான நேற்று காலை பருத்தித்துறை, மருதடி ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளை தொடர்ந்து புதிய பிரதேச செயலாளரைத் தவில் நாதஸ்வர இசையுடன் செயலகத்துக்கு அழைத்து வரும் நிகழ்வு இடம்பெற்றது.

ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் கிராம அலுவலருமாகிய அரியகுமார் ரதீஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் பதில் பிரதேச செயலாளர் ச.சிவசிறி மற்றும் உதவி பிரதேச செயலாளர் பசுபதி தயானந்தன் உள்ளிட்ட பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ஆழ்வாப்பிள்ளை சிறி வடக்கு மாகாண பிரதம செயலக செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்ற நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சி.சத்தியசீலன் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# தமிழகம் வந்தார் பிரதமர் மோடி: திருச்சியில் உற்சாக வரவேற்பு




திருச்சியில் விமான நிலைய புதிய முனையம் உட்பட 19,850 கோடி ரூபா மதிப்பிலான புதிய திட்டங்களின் தொடக்க விழா, பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஆகியவற்றில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி இன்று திருச்சி வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் விமான நிலையத்திலிருந்து பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு காரில் சென்ற பிரதமர் மோடிக்கு பா.ஜ.க. சார்பில் உற்சாக வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

வழிநெடுகிலும் ஆங்காங்கே மேடை அமைத்து பரதநாட்டியம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. வீதியில் திரண்டிருந்த பா.ஜ.கவினர் பிரதமரின் கார் கடந்தபோது மலர்தூவி வரவேற்பு நல்கினர். பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு வந்த பிதமர் மோடி அங்கு பாரதிதாசன் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

முன்னதாக பிரதமர் உள்ளே வந்ததும், பதக்கம் பெறும் மாணவர்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு முன்னால் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த இருக்கைகளில் பிரதமர், ஆளுநர், முதல்வர் அமர்ந்தனர்.

குழு புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. பின்னர் அவர்களைப் பார்த்த பிரதமர் நரேந்திர மோடி, புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தார். பட்டம் பெற்ற மாணவர்களை நோக்கி "டில்லிக்கு வர விருப்பமா?" என்று அவர் வினவினார். மாணவர்கள் உற்சாகமான குரலில் ஆமோதித்தனர்.

# புதியதோர் உலகம் செய்வோம்: திருச்சி பல்கலையில் மோடி உரை

"புதியதோர் உலகு செய்வோம் என்ற பாரதிதாசன் கூற்றுப்படி, 2047-ஐ நோக்கி பயணிப்போம்" என்று பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"எனது மாணவ குடும்பமே, பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றது எனக்கு சிறப்பு வாய்ந்த ஒன்று. ஏனென்றால், புத்தாண்டில் நான் பங்கேற்கும் முதல் பொது நிகழ்ச்சி இதுவாகும். மிக அழகிய மாநிலமான தமிழ்நாட்டில் இருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்




பங்கேற்கும் முதல் பிரதமர் என்பதில் மகிழ்ச்சி.

பண்டைய காலத்திலேயே காஞ்சிபுரம் உள்ளிட்ட பல பகுதிகள் கல்வியில் சிறந்து விளங்கியது. தற்போது இந்தியாவை உலக நாடுகள் நம்பிக்கையுடன் பார்க்கிறது. பொருளாதார வளர்ச்சியில் இந்தியா புதிய உயரங்களை படைத்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் விமான நிலையங்களின் எண்ணிக்கை இரு மடங்காக உயர்ந்திருக்கிறது. பாரதிதாசன் பல்கலைகழகத்தில் நடக்கும் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் முதல் பிரதமர் என்ற வகையில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வி என்பது அறிவோடு சகோதரத்துவத்தையும் வளர்க்க வேண்டும். மொழியையும், வரலாற்றையும் படிக்கும் போது கலாச்சாரம் வலுப்படும். புதியதோர் உலகு செய்வோம் என்ற பாரதிதாசன் கூற்றுப்படி, 2047-ஐ நோக்கி பயணிப்போம். இதுவரை இல்லாத அளவுக்கு இந்தியாவின் திறமையை நமது இளைஞர்கள் உலகுக்கு பறைசாற்றுகிறார்கள்." -என்றார்.

# கின்னஸ் சாதனை படைத்த சூரிய நமஸ்காரம்!



இந்தியாவின் குஜராத்தில் நான்காயிரம் பேர் சேர்ந்து ஒரே நேரத்தில் சூரிய நமஸ்காரம் செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

இந்த சாதனையானது புத்தாண்டையொட்டி மோதரா சூரியக் கோவிலில் நேற்று காலையில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த நிகழ்வில் குஜராத்தின் முதல் அமைச்சர் பூபேந்திர பாய் பட்டேல் பங்கேற்றுள்ளார்.

இதுகுறித்து கின்னஸ் உலக சாதனை நடுவர் ஸ்வப்னில் தங்காரிகர் கூறும் போது,

"அதிகளவில் சூரிய நமஸ்காரம் செய்யும் சாதனையைப் பரிசோதிக்க வந்துள்ளேன். இதுவரை இத்தகைய சாதனையை யாரும் செய்ததில்லை.

மொதேராவில் நடைபெற்ற சூர்ய நமஸ்கார நிகழ்வைப் பொறுத்தவரை, சுமார் 4 ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் சூரிய நமஸ்காரத்தைச் செய்துள்ளனர். 51 வெவ்வேறு ஊர்களில் 108 இடங்களில் சுமார் 4 ஆயிரம் மக்கள், சூரிய நமஸ்காரம் செய்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

# தென்கொரிய எதிர்க்கட்சித் தலைவர் மீது தாக்குதல்: செய்தியாளர்கள் சந்திப்பின்போது கத்திக்குத்து





தென்கொரியா எதிர்க்கட்சித் தலைவர் லீ ஜே மியுங், அந்த நாட்டின் துறைமுக நகரமான பூசானில் செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது கத்திக் குத்து தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

லீ ஜே மியுங், புதிய விமான நிலையத்தை பார்வையிட்ட பின் செய்தியார்களுடன் பேசிய படி தனது காருக்கு நடந்து செல்லும் போது அவருக்கு முன்னாள் சென்ற நபர் லீ மீது பாய்ந்து அவரின் கழுத்தில் கத்தியால் குத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்து கீழே விழும் லீக்கு மக்கள் உதவி செய்தனர். அதில் ஒருவர் தனது கைக்குட்டையால் அவரின் கழுத்தைக் அழுத்திப் பிடிப்பது உள்ளிட்ட காட்சிகள் உள்ளூர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

காயமடைந்த எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாக நோயாளர் காவுவண்டியில் ஏற்றப்பட்டு, பின்னர் ஹெலிகாப்டர் மூலமாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். கத்திக் குத்து காயத்தால் லீக்கு ரத்தப்போக்கு இருந்த போதிலும் அவர் நினைவிழக்கவில்லை. உடனடியாக அவர் பூசன் தேசிய பல்கலைக்கழக மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து மருத்துவமனைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய லீயின் ஜனநாயகக் கட்சி எம்.பி. குவான் சில் சியுங் கூறுகையில்,

“இது எதிர்க்கட்சித் தலைவர் லீக்கு எதிரான தீவிரவாத தாக்குதல், ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலான இதுபோன்ற செயல்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. லீயின் நிலைமை குறித்த முழுமையான மருத்துவ அறிக்கைக்காக காத்திருக்கிறோம். இந்த தாக்குதல் குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும்” என்று தெரிவித்தார்.

அவரின் கழுத்தில் ஒரு சென்ரி மீற்றர் அளவுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. ரத்தப்போக்கு குறைவாகவே உள்ளது. அவர் சுயநினைவில் இருக்கிறார் என்று பூசான் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர். லீயை தாக்கியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று யுன்ஹப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் குறித்து கேள்விப்பட்டதும் லீ ஜோ மியூங் பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி யோன் கவலையடைந்தார் எனவும் எந்தச் சூழ்நிலையிலும் இது போன்ற தாக்குதல் சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

59 வயதான எதிர்க்கட்சித் தலைவர் லீ கடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் யூன் சுக் யோலிடம் தோல்வியுற்றார். அடுத்த 2027 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் லீ போட்டியிடலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் வெளியான கருத்துக்கணிப்புகள் அவர் தீவிரமான போட்டியாளராக இருப்பார் என்று தெரிவிக்கின்றன.

# ஜப்பான் நிலநடுக்கத்தில் 30 பேர் பலி: சுனாமி எச்சரிக்கை தளர்த்தப்பட்டது

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தினால் 30 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

7.6 ரிக்டர் அளவில் பதிவான நிலநடுக்கத்தால் கட்டடங்கள் அதிர்ந்ததுடன் வீதிகள் பிளந்து கடுமையாக சேதம் அடைந்தன.

அத்துடன், மிகப்பெரிய நிலநடுக்கம் என்பதால் உயர்மட்ட சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அது தளர்த்தப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் நேற்றைய புத்தாண்டு தினத்தில் இருந்து இன்று வரை அதிர்ந்து கொண்டே இருந்ததாக ஜப்பான் வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதேவேளை மொத்தமாக 155 முறைநில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதில் பெரும்பாலான நிலநடுக்கங்கள் ரிக்டர் அளவில் 3இற்கும் அதிகமாக பதிவாகியுள்ளன.

இன்னும் ஓரிரு நாட்களில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதால் கடற்கரையோர பகுதிகளில் கவனமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நிலநடுக்கம் குறித்து தொலைபேசியில் எச்சரிக்கை மணி ஒலித்ததால் மக்கள் சுதாரித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்கு சென்றதால் உயிரிழப்பு பெரிய அளவில் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.